தலைப்பு 270 - அம்பாறை மாவட்ட செயலகம் - 2024

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 270 – அம்பாறை மாவட்ட செயலகத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் அம்பாறை மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2025 மே 27 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குரிய விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2025 மே 28 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இவ் அறிக்கையின் 1.6 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2024 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அம்பாறை மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்களில் நிதி நிலைமை, நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுகளை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க பொருண்மையானவை தொடர்ப்பிலும் நியாமான நிலைமையை பிரதிபளிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ் அறிக்கையில் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த வியடங்களில் இருந்துதான தாக்கத்தை தவிரத்து எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக ஆக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்கை தயாரிக்கும் அடிப்படை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 01 தொடர்பில் கவணம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்ப பிரமாணம் 150, 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அம்பாறை மாவட்ட செயலகத்தின் பொது திறைசேரியினதும், பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டிற்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால் இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை அம்பாறை மாவட்ட செயலகத்தின், பொது திறைசேரியினதும், இலங்கை பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மட்டும் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 திகதிய அரச கணக்குகள் வழிகாட்ட இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும், உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக்கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அம்பாறை மாவட்ட செயலகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன், இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படை ஒன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களினால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவு ஒன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடகத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள், சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமானதாகவும் உள்ளடக்கப்பட்டதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலை மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) ஆதனங்கள் பொறித்தொகுகள் மற்றும் உபகரணங்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	தமன, அட்டாளச்சேனை, திருக்கோவில் ஆகிய பிரதேச செயலகங்களுக்குரிய காணிகளும், பதியதலாவ மற்றும் தமன ஆகிய பிரதேச செயலகங்களுக்குரிய உத்தியோகபூர்வ வாசஸ்தளங்களும் மற்றும் அரசாங்க வீடுகளை பெறுமதி மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	இந்த பிரதேச செயலகங்களுக்குரிய காணிகள், உத்தியோகபூர்வ வாசஸ்தளங்கள் மற்றும் அரச வீடுகளை பெறுமதி மதிப்பீடு செய்து தரும்படி பல வருட காலம் முதல் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திடம் கோறிக்கை விடுத்து மற்றும் நினைவூட்டல்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது தொடர்பாக 2025 மார்ச் 18 திகதி நடைபெற்ற மாவட்ட கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் பெறுமதி மதிப்பீடு கிடைக்கும் வரை மாவட்ட செயலாளரினால் நியனம் செய்யப்பட்ட குழுவொன்றின் மூலம் மொத்த மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டு, அந்தப் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	மாவட்ட செயலகங்களுக்குரிய சொத்துக்களை இனங்கண்டு அவற்றை சரியாக பெறுமதி மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களில் உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ii)	2017 மற்றும் 2018 ஆண்டுகளின் போது நிர்மாணிக்கப்பட்டிருந்த பதினைந்து பிரதேச செயலக பிரிவுகளைச் சேர்ந்த நிலசெவன கட்டிடங்களின் பெறுமதி ரூபா 46,422,256 தொகை நிதிக்கூற்றுக்களில் காட்டுதவற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	2017 மற்றும் 2018 ஆண்டுகளின் போது நிர்மாணிக்கப்பட்டிருந்த பதினைந்து பிரதேச செயலக பிரிவுகளைச் சேர்ந்த நிலசெவன கட்டிடங்களின் பெறுமதி 46,422,256 தொகை காணப்பட்டதுடன், தற்போது அவற்றில் ரூபா 37,524,313 இற்கான கட்டிடங்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளது. ராகுகல, பொத்துவில், ஆலையடிவேம்பு மற்றும் இரக்காமம் பிரதேச செயலக அலுவலகங்கள் தொடர்ந்தும் தமது நிலசெவன கட்டங்களின் பெறுமதியை சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தில் உட்படுத்தப்பட வேண்டியுள்ளது.	- மேற்படி -

(iii)	மீளாய்வாண்டிற்குரிய நிதியல்லாத சொத்துக்களின் பொழிப்பு (SA-80) இன் படி ஒவ்வொரு சொத்து விடயங்களுக்குரிய சமர்ப்பிக்கப்பட்ட வரவு வைத்தல்களின் கூட்டுத்தொகை ரூபா 3,440,139,546 தொகையும், திறைசேரியின் திரண்ட நிதியல்லாத சொத்துக்களின் கூற்றில் (SA-82) மீளாய்வாண்டின் போது வரவு வைத்தல்கள் ரூபா 145,225,657 தொகையும், திறைச்சேரியின் பரீட்சை மீதியின் படி வரவு வைத்தல்கள் ரூபா 136,927,445 தொகையும் காணப்பட்டமையால், மீதிகளிடையே இணக்கமின்மை காணப்பட்டது.	நிதியல்லாத சொத்துக்களில் காணப்பட்ட வழுக்களை சரி செய்வதற்காக நாட்குறிப்பு பதிவொன்று உட்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி, ஒவ்வொரு குறியீட்டு இலக்கத்தின் கீழ் பெறுமதி SA-21 நிதிப் பெறுமதியை கூட்டிய போது SA-80 இன் மீதியுடன் பொருந்துகின்றது. மேலும், SA-82 மீதியில் வித்தியாசமொன்று காணப்படுவதுடன், அதனை சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் சொத்துக்கள் கோப்புக்கள் தயாரிக்கும் போது ஏற்பட்டிருந்த வழுவொன்றாகும். சிகாஸ் கோப்பினை திறைசேரிக்கு எடுத்துச்சென்று அந்த வழுவினை சரி செய்வதற்கு எதிர் காலத்தில் நடவடிக்கை எடுப்பபேன்.	வித்தியாசங்களை இனங்கண்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்கு முன்னர் திறைசேரி அச்சுப் பிரதியுடன் இணக்கம் செய்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(iv)	நிதியல்லாத சொத்துக்களின் பொழிப்பில் (SA-80) 9152 சொத்துக்கள் விடயத்தின் கீழ் மீளாய்வாண்டின் போது வரவு வைத்தல்கள் ரூபா 684,376,370 தொகை என காட்டப்பட்ட போதிலும், திறைசேரியின் அச்சுப் பதிவின் சொத்துக்களின் மாதாந்த பொழிப்பு பதிவின் படி அது ரூபா 688,888,972 தொகை என காட்டப்பட்டிருந்த காரணத்தினால் நிதியல்லாத சொத்துக்களின் பொழிப்பில் மீளாய்வாண்டின் போது வரவு வைத்தல்கள் ரூபா 4,512,602 தொகையினால் மிகையாக காட்டப்பட்டிருந்தது.	நிதியல்லாத சொத்துக்களின் பொழிப்பு (SA-80) இன் 9152 சொத்துக்கள் விடயத்தின் கீழ் 2024 ஆண்டின் போது மாதாந்த வரவு வைத்தல்களின் கூட்டுத்தொகை ரூபா 688,888,972 தொகையென காணப்படுவதுடன், அந்த பெறுமதி சரியானதென கருணையுடன் அறிவிக்கின்றேன்.	- மேற்படி -
(v)	திரண்ட நிதியல்லாத சொத்துக்கள் கூற்று (SA-82) படி மீளாய்வாண்டின் ஆரம்பத் திகதியில் உள்ளவாறு நடைமுறை வேலையின் கீழ் ரூபா 7,990,518 தொகை பெறுமதியான அரசாங்க வீடுகள் மற்றும் சுற்றுலா விடுதிகளும் ரூபா 28,500,000 தொகை பெறுமதியான கார்கோ வாகனங்களின் கூட்டுத்தொகை என ரூபா 36,490,518 தொகை காணப்படுகின்றதென குறிப்பிடப்படுகின்ற போதிலும், பௌதீக ரீதியாக அவ்வாறு நடைபெறு வேலை அல்லது கார்கோ வாகனங்களும் காணப்படவில்லை.	சிகாஸ் ஒன்றித்த கணக்குப் பொழிப்பில் மற்றும் திறைசேரி அச்சுப் பதிவு (SA-82) இல் குறிப்பிடப்பட்டுள்ள தரவுகளில் இணக்கமின்மையயொன்று காணப்படுகின்றது. இது தொடர்பாக திறைசேரி உத்தியோகத்தருடன் கலந்துரையாடியதுடன், இது சிகாஸ் முறைமையில் ஏற்பட்டுள்ள வழுவொன்றாக காணப்படுவதனால் திறைசேரிக்கு குறிப்பிட்ட சிகாஸ் கோப்பினை எடுத்துச் சென்று சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன்.	திறைச்சேரி மீதிகள் மற்றும் மாவட்ட செயலக கணக்கு மீதிகளை பரிசோதனை செய்து இணக்கமின்மையை இனங்கண்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்கு முன்னர் சரி செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(vi)	மீளாய்வாண்டு ஆரம்பத் திகதியில் உள்ளவாறு நிதி அல்லாத சொத்துக்கள் பொழிப்புக் கூற்று (SA-80) நான்கு சொத்து விடயங்களுக்குரிய ஆரம்ப மீதி ரூபா 7,392,945,922 தொகை எனினும், திரண்ட நிதி அல்லாத சொத்துக்கள் கணக்குக் கூற்றில் (SA-82) அந்த நான்கு சொத்து விடயங்களுக்குரிய ஆரம்ப மீதி ரூபா 10,677,482,178 தொகையாகும். அதன்படி, இரண்டு கூற்றுக்களிலும் நிதியல்லாத சொத்துக்களின் ஆரம்ப மீதியிடையே ரூபா 3,284,536,256 இற்கான வித்தியாசமொன்று காணப்பட்டது.	2023 ஆண்டின் இறுதி மீதிகளில் ஏற்பட்டுள்ள வழுவொன்றாக காணப்படுவதுடன், அதனை சரி செய்வதற்காக நாட்குறிப்புப் பதிவேடு திறைச்சேரிக்கு அனுப்பப்பட்ட போதிலும், அது சரி செய்யப்பட்டிருக்கவில்லை. மீண்டும் நாட்குறிப்புப் பதிவொன்று திறைசேரிக்கு அனுப்பி சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன்.	வித்தியாசங்களை இனங்கண்டு நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு முன்னர் திறைசேரியின் பதிவுடன் இணக்கம் செய்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(vii)	நிதிச் செயலாற்றுகை கூற்றின் படி மீளாய்வாண்டின் போது மூலதன சொத்துக்கள் தனதாக்கல் தானதாக்களின் பெறுமதி ரூபா 78,816,549 தொகை எனினும், திறைசேரி ஏடுகளின் படி திரண்ட நிதியல்லாத சொத்துக் கணக்குக்கூற்றில் (SA-82) அது ரூபா 145,225,657 தொகையாக காணப்பட்டமையால் நிதிச் செயலாற்றுகைக் கூற்று மற்றும் திறைசேரி ஏடுகளிடையே மூலதனச் சொத்துக்கள் தனதாக்கல் பெறுமதியில் ரூபா 66,409,108 இற்கான வித்தியாசமொன்று காணப்பட்டது.	சிகாஸ் ஒன்றித்த கணக்குப் பொழிப்பு மற்றும் திறைசேரி அச்சுப் பதிவு (SA-82) இல் குறிப்பிடப்பட்டுள்ள தரவுகளில் இணக்கமின்மையொன்று காணப்படுகின்றது. இது தொடர்பாக திறைசேரி உத்தியோகத்தருடன் கலந்துரையாடியதுடன், இது சிகாஸ் முறைமையில் ஏற்பட்டுள்ள வழுவொன்றாக காணப்படுவதனால், சிகாஸ் கோப்பினை திறைசேரிக்கு எடுத்துச்சென்று அந்த வழுவினை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன்.	வித்தியாசங்களை இனங்கண்டு நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு முன்னர் திறைசேரியின் அச்சுப் பதிவுடன் இணக்கம் செய்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஆ) கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

கணக்காய்வு அவதானிப்பு	**கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை**	**பரிந்துரை**
மீளாய்ாவண்டின் போது நிதிச் செயலாற்றுகைக் கூற்றில் நிதியல்லாத சொத்துக்கள் தனதாக்கல் என ரூபா 78,816,549 தொகை காட்டப்பட்டிந்த போதிலும், அதனை உறுதிப்படுத்துவதற்காக கணக்காய்விற்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	2024 ஆண்டின் போது மூலதனச் சொத்துக்கள் தனதாக்களுக்காக ஒவ்வொரு பிரதேச செயலகங்களினாலும் மேற்கொள்ளப்பட்டிருந்த செலவுகளுடனான அறிக்கையின் மூலம் தெரியப்படுத்தியிருந்தது.	பிரதேச செயலகங்களின் படி மற்றும் மாவட்ட செயலகங்களின் பிரதிநிதிப்படுத்தக்கூடியவாறு படி தனதாக்கப்பட்ட மூலதனச் சொத்துக்கள் தொடர்பாக விரிவான அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

2. ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம், பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன எனவும்.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்டிருந்த 1.6.1(அ)(i) மற்றும் (v) பந்திகளின் பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

3. நிதி மீளாய்வு

3.1 செலவு முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
09 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால், மாவட்ட செயலகத்திற்கு 12 செலவு விடயங்கள் தொடர்பாக வழங்கியிருந்த ரூபா 54,296,905 இற்கான ஏற்பாடுகளில் 25 சதவீதம் முதல் 49 சதவீதம் வரையான எண்ணிக்கையொன்று பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.	2024 ஆண்டு நடைபெற்ற சனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் முதன்மையான சனாதிபதியவர்களின் செலவுத் தலைப்பின் கீழ் வழங்கப்பட்டிருந்த மூலதன ஏற்பாட்டுச் செயற்திட்டங்கள் சனாதிபதி செயலகத்தின் அறிவுரையின் படி இரத்துச் செய்ய நேரிட்டமை, வருட இறுதி மாதத்தில் பல்வேறு அமைச்சுக்களினால் வழங்கியிருந்த ஏற்பாடுகள் குறிப்பிட் செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்கு போதியளவு காலம் காணப்படாமை மற்றும் நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக மீண்டும் திருப்பியனுப்ப நேரிட்டிருந்தது.	முறையான வேலைத் திட்டமொன்று மற்றும் கண்காணிப்பொன்று மேற்கொள்ளப்பட்டு வழங்கப்படுகின்ற ஏற்பாடுகளை குறிப்பிட்ட கருமங்களுக்கு முழுமையாக பயன்படுத்த வேண்டியதுடன், இனங்காணப்பட்ட செயற்திடங்களை செயற்படுத்தாத தரப்பினர் தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.2 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கியிருந்த ஏற்பாடுகளை பயன்படுத்தல்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ) **புத்தசாசன சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சு**		
புத்தசாசன சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சினால் மகாஓய பிரதேச செயலகத்திற்கு கலாச்சார நிலையமொன்று நிர்மாணிப்பதற்காக 2015 ஆண்டு முதல் 2024 ஆண்டு வரை ரூபா 42,000,000 இற்கான ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருந்த போதிலும், 2021 ஆண்டளவில் ரூபா 16,695,573 தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த அந்தக் கட்டிடத்தின் நிர்மாண வேலைகள் இடைநடுவே நிறுத்தப்பட்டிருந்தது. மீண்டும் 2024 ஆண்டில் ரூபா 12,870,964 தொகை செலவிடப்பட்டு நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும்,	2015 நவம்பர் 24 திகதி இந்த ஒப்பந்த வேலைகள் வழங்கப்பட்டிருந்ததுடன், செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட வேண்டிய காலம் 180 நாட்களாக காணப்பட்டதுடன், நிர்மாண வேலைகள் 2015 திசெம்பர் 01 திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்தது. எனினும், ஒப்பந்தக்காரரின் கவனயீனத்தன்மை, பலவீன நிதி முகாமைத்துவம் போன்ற காரணங்களினால் செயற்திட்டம் பாதியளவில் கைவிடப்பட்ட மட்டத்தை அடைந்திருந்தது. அதன் விளைவாக கட்டிடத்தை பயன்படுத்த முடியாத மட்டத்தில் கணிசமாக காலம் காணப்பட்டது. மூன்றாம் கட்டத்திற்காக கலாச்சார அலுவல்கள் அமைச்சினால்	கவனயீனமாக செயற்பட்ட ஒப்பந்தக்காரர்கள் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுப்பதற்கும், முறைசார் வேலைத்திட்டமொன்றின் மூலம் கட்டிடத்தை பயன்படுத்தக்கூடிய நிலைமைக்கு ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	ஆரம்பம் முதல் 10 வருடங்கள் கடந்திருந்த போதிலும், செயற்திட்டத்தின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.	ரூபா 13 மில்லியன் ஏற்பாடொன்று வழங்கியிருந்ததுடன், அதன் மூலம் கூரை தயாரித்தல் சாந்து பூசுதல், தரையை செப்பனிடல், ஜன்னல்கள் பொருத்துதல், வர்ணம் பூசுதல், மின்சுற்று முறைமையை தயாரித்தல் மற்றும் நீர்க்குழாய் அலுவல்கள் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. தற்போது இந்த கலாச்சார நிலையம் முகாமைத்துவம் செய்யக்கூடிய மட்டத்தில் காணப்படுகின்றது.	

(ஆ) சமூக நலனோம்பு மற்றும் ஆரம்ப கைத்தொழில் அமைச்சு

(i)	சமூக நலனோம்பு மற்றும் ஆரம்ப கைத்தொழில் அமைச்சின் 2018 ஒக்தோபர் 15 திகதிய சுற்றறிக்கை இலக்கம் NSE/EL/01/2018 இன் பிரிவு 2.14 இன் பிரகாரம் முதியோர் கொடுப்பனவு தாமதக் கொடுப்பனவுக்காக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், உகன பிரதேச செயலகத்தினால் கூட்டுத்தொகை ரூபா 2,707,900 இற்கான மொத்த முதியோர் கொடுப்பனவு 792 முதியோர்களுக்கு செலுத்தியிருக்காததுடன், 2024 ஜனவரி முதல் திசெம்பர் வரையான காலப் பகுதியில் அந்தப் பணம் மீண்டும் அமைச்சுக்கு அனுப்பப்பட்டிருந்தது.	சமூக நலனோம்பு மற்றும் ஆரம்ப கைத்தொழில் அமைச்சின் 2018.10.15 திகதிய சுற்றறிக்கை இலக்கம் NSC/EL/01/2018 இன் பிரிவு 2.14 இன் பிரகாரம் தாமதக் கொடுப்பனவுக்கான ஏற்பாடுகள் கொடுப்பனவு பெறுவோரின் அவசர நோய் நிலைமையொன்று அல்லது வேறேதும் நியாயமான காரணமொன்றுக்கு மாத்திரம் செலுத்தக்கூடியதாக காணப்பட்டவுடன், அவ்வாறு இன்றிய சந்தர்ப்பங்களில் குறிப்பிட்ட மாதத்தினுள் கொடுப்பனவு பெற்றுக்கொள்ளாவிடின், அதனை மீண்டும் செலுத்த முடியாது என அறிவுரை வழங்கப்பட்டிருந்தது. மற்றும் கொடுப்பனவு பெறுவோரின் மொத்த எண்ணிக்கை 26,801 ஆக காணப்படுவதுனடன், அவற்றில் பெற்றுக்கொள்ளாதவர்களின் எண்ணிக்கை 792 ஆகும். அது 4% ஆன குறைந்த எண்ணிக்கையென கருணையுடன் தெரிவிக்கின்றேன்.	முறையாக செயற்பட்டு குறிப்பிட்ட நலன் பெறுவோரை இனங்கண்டு கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்களுக்கு நடவடிக்கை எடுப்பதற்கும், முதியோர்களுக்கு குறிப்பிட்ட நலன்களை செலுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ii)	சமூக நலனோம்பு மற்றும் ஆரம்ப கைத்தொழில் அமைச்சின் 2018 ஒக்தோபர் 15 திகதிய சுற்றறிக்கை இலக்கம் NSE/EL/01/2018 இன் பிரிவு 2.15 இன் பிரகாரம் தொடர்ச்சியாக 03 மாத காலம் முதியோர் கொடுப்பனவு பெற்றுக்கொள்ளாத நலன் பெறுவோரின் பெயர்களை குழுவிற்கு சமர்ப்பித்து அதன் பின்னர் காத்திருப்போர் பட்டியலில் காணப்படும் அடுத்த நலன்பெறுவோருக்கு அந்த கொடுப்பனவை பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டிய போதிலும், உகன பிரதேச செயலகத்தினால் அவ்வாறு செய்திருக்கவில்லை.	சமூக நலனோம்பு மற்றும் ஆரம்ப கைத்தொழில் அமைச்சின் 2018 ஒக்தோபர் 15 திகதிய சுற்றறிக்கை இலக்கம் NSE/EL/01/2018 இன் பிரிவு 2.14 இன் பிரகாரம் தொடர்ச்சியாக மூன்று மாத காலம் முதியோர் கொடுப்பனவு பெற்றுக்கொள்ளாத நலன் பெறுவோருக்கு பதிலாக புதிய நலன் பெறுவோரை உட்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டது குறிப்பிட்ட தினத்தில் பணம் கிடைக்கப் பெறாமை, பல மாதங்களின் பணம் ஒரே தடவையில் கிடைத்தல் ஆகிய விடங்களின் காரணாக கடந்த ஆண்டு முதியோர் கொடுப்பனவு வழங்கும் போது முறைசாராமை ஏற்பட்டிருந்தமையால் மற்றும் கடமைக்காக போதியளவு உத்தியோகத்தர்கள் காணப்படாமை	முறையான மேற்பார்வை மற்றும் பின்தொடர் நடவடிக்கை மேற்கொண்டு சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் தகைமை பெறும் நலன் பெறுவோருக்கு கொடுபனவுகள் செலுத்தப்படுவதற்கான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டும்.

		ஆகிய காரணங்களினாலாகும். இந்தத் தாமதங்கள் எதிர் காலத்தில் நடைபெறாமல் இருப்பதற்காக குறிப்பிட்ட விடய உத்தியோகத்தர்களை சமூக சேவைப் பிரிவிற்கு இணைப்பதற்காக நடவடிக்கை எடுப்பேன்.	
(இ)	**ஓய்வூதியத் திணைக்களம்**		
	ஓய்வூதியக் கொடுப்பனவு செலுத்துவது தொடர்பாக உரிய முறையில் கணித்தல் மேற்கொள்ளப்படாமையால் 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு உகன பிரதேச செயலாளர் பிரிவில் 37 ஓய்வூதியம் பெறுவோருக்கு ரூபா 2,026,913 இற்கான ஓய்வூதியக் கொடுப்பனவு மிகையாக செலுத்தப்பட்டிருந்தது.	உகன பிரதேச செயலகப் பிரிவில் 37 ஓய்வூதியம் பெறுவோருக்கு ஓய்வூதியக் கொடுப்பனவு மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தவுடன், அவ்வாறு செலுத்தப்பட்டிருந்த ரூபா 2,026,913 தொகை தற்போது குறிப்பிட்ட ஓய்வூதியம் பெறுவோரிடம் மாதாந்தம் அறவீடு செய்வதற்கு ஓய்வூதியத் திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	முறையான விசாரணையொன்று மேற்கொண்டு உத்தியோகத்தர்களின் முறைசாராமல் செயற்பட்டிருந்ததால் நடவடிக்கை எடுப்பதற்கும், மிகையாக செலுத்தியிருந்த தொகையினை விரைவாக அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஈ)	**மகளிர், சிறுவர் விவகார மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு**		
(i)	கிராம சக்தி நிகழ்ச்சித் திட்டம் 2018 முதல் 2023 ஆண்டு வரையான காலப் பகுதியினுள் கிராம சக்தி சங்கங்களின் அங்கத்தவர்களுக்கு வழங்கியிருந்த ரூபா 183,669,297 இற்கான கடன் தொகையின் ரூபா 114,608,554 தொகை மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி அளவிலும், அறவீடு செய்யப்பட வேண்டிக் காணப்பட்டது.	2023 ஆண்டிற்கான கிராம சக்தி அறிக்கையின் படி அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 79,784,717 தொகையாக காணப்பட்ட போதிலும், 2024 ஆண்டில் அது ரூபா 75,314,300 தொகை வரை குறைவடைந்திருந்தது. நிலுவைத் தொகையை விரைவாக அறவீடு செய்யும் படி பிரதேச செயலாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.	கால ரீதியாக நிலுவைக் கடனை அறவீடு செய்யாத தரப்பினர்களுக்கு நடவடிக்கை எடுப்பதற்கும் நிலுவைக் கடனை விரைவாக அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ii)	கிராம சக்தி நிகழ்ச்சித் திட்டம் தொடர்பாக சௌபாக்கிய அபிவிருத்தி பணியகத்தின் மூலம் வெளியிடப்பட்டிருந்த SDB/SPV/GS/2022/சுற்றறிக்கை 01 மற்றும் 2022 ஜூன் 28 திகதிய சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்படு நிலையில் காணப்படுகின்ற, கிராம சக்தி தாய்ச் சங்கங்களில் காணப்படுகின்ற பணத்தை பயன்படுத்தி நுண் நிதிக் கடன் நிகழ்ச்சித் திட்டங்களுக்காக, தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக மற்றும் சங்க அங்கத்தவர்களுக்காக அத்தியவசியான ஏனைய நிகழ்ச்சித் திட்டங்களுக்கான செயற்திட்டங்களுக்கு பயன்படுத்த	2025.03.31 திகதியில் உள்ளவாறு அம்பாறை மாவட்டத்தின் 122 செயற்படாத கிராம சக்திச் சங்கங்களின் ரூபா 14,131,118.30 தொகையொன்று காணப்படுவதுடன், அந்தப் பணம் செயற்படும் கிராம சக்திச் சங்கங்களுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கும் படி மாவட்டத்தின் அனைத்து பிரதேச செயலாளர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டது. அதன்படி, ரூபா 430,964 தொகை தனம பிரதேச செயலகப் பிரிவின் செயற்படு சங்கங்களுக்கு மாற்றப்பட்டுள்ளது.	தகைமையுடைய நலன் பெறுவோர்களை தெரிவு செய்து கடன் வழங்கப்பட்டு நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படு நிலைமைக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கும், செயற்படாத சங்கங்களை செயற்படு நிலைக்கு மாற்றுவதற்கு அல்லது முறைப் பிரகாரம் நடவடிக்கை எடுத்து அவற்றை அரச வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	முடியும் எனினும், அம்பாறை மாவட்டத்தில் 234 பதிவு செய்யப்பட்ட சங்கங்களில் செயற்படு நிலையில் காணப்படுகின்ற 122 சங்கங்கள் சுற்றறிக்கையின் படி தமது நிதியை பயன்படுத்தாமல் தமது வங்கிக் கணக்குகளில் கூட்டுத்தொகை ரூபா 27,561,514 இற்கான தொகையொன்று விளைவற்று தடுத்து வைக்கப்பட்டிருந்ததுடன், பதிவு செய்யப்பட்ட மொத்த சங்கங்களில் 2025 ஜூன் 30 திகதி அளவில் 112 செயற்படாத சங்கங்களின், அவர்களின் வங்கிக் கணக்குகளில் அங்கத்துவ நிதியம் மற்றும் அரசாங்க நிதியம் என ரூபா 12,581,380 இற்கான தொகையொன்று தடுத்து வைக்கப்பட்டிருந்தது.		
(iii)	இலங்கை மகளிர் பணியத்தினால் குறைந்த வருமானம் உடைய விதவைகள் மற்றும் பெண்களை பிரதான குடியிருப்பாளராக கொண்ட குடும்பங்களை மேம்படுத்துவதற்காக அம்பாறை மாவட்ட செயலகத்தின் கீழ் 05 பிரதேச செயலகப் பிரிவுகளில் 2010 முதல் 2022 ஆண்டு வரையான காலப் பகுதியில் செயற்படுத்தப்பட்டிருந்த 05 கடன் செயற்திட்டங்களின் கீழ் 24 நபர்கள் தொடர்பாக ரூபா 99,496 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது.	மகளிர், சிறுவர் விவகார மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் கீழ் காணப்படுகின்ற இலங்கை மகளிர் பணியத்தின் மூலம் குறைந்த வருமானமுடைய விதவைகள் மற்றும் பெண்களை பிரதான குடியிருப்பாளராக கொண்டுள்ள குடும்பங்களின் பொருளாதார நிலைமையை மேம்படுத்துவதற்காக அம்பாறை மாவட்ட செலகத்தின் கீழ் 05 பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு வழங்கியிருந்த கடன் தொகைகளை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டதுடன், இந்த அனைத்துக் கடன்பட்டோருடனும் செலுத்துவதற்கான இணக்கப்பாடொன்று பெற்றுக்கொண்டு கடனை அறவீடு செய்வதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.	நிலுவை கடன் மீதிகளை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(உ)	**நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைள் அமைச்சு** நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைள் அமைச்சின் கீழ் காணப்படுகின்ற நலன்புரி நன்மைகள் சபையினால் 2023 ஜூலை 13 திகதி வெளியிடப்பட்டிருந்த இலக்கம் MF/WBB/02NOTICE/D/DIV-2022 கொண்ட கடிதத்தின் மூலம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளவாறு ஒரு நலன் பெறுவோர் மாத்திரம் காணப்படும் குடும்பமொன்றின் அந்த நலன் பெறுவோர் இறந்த பின்னர் கிராம உத்தியோகத்தரினால் நலன்புரி நன்மைகள் சபைக்கு அறிவிக்கப்பட்டு அந்த நலன் பெறுவோரின் கொடுப்பனவை நிறுத்தப்பட வேண்டிய	அஸ்வெசும நலன் பெறுவோர் இறந்தவுடன், அது தொடர்பாக நலன்புரி நன்மைகள் சபைக்கு அறிவுறுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கும் படி கிராம உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தும் படி அனைத்து பிரதேச செயலாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டது. மிகையாக செலுத்திய பணத்தினை அறவீடு செய்வதற்காக பிரதேச செயலாளர்களினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	முறையான விசாரணையொன்று மேற்கொண்டு மிகையாக செலுத்தியுள்ள பணத்தை குறிப்பிட்ட பொறுப்பான தரப்பினர்களிடம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

போதிலும், 05 பிரதேச செயலகங்களின் 23 அஸ்வெசும நலனோம்பு நலன் பெறுவோரின் கணக்குகளுக்கு அவர்கள் இறந்த பின்னரும் பணம் செலவு வைக்கப்பட்டிருந்தது. அதன்படி, குறிப்பிட்ட பிரிவுகளின் கிராம உத்தியோகத்தர்கள் உரிய முறையில் கடமைகளை மேற்கொண்டிருக்காத காரணத்தினால், அரசுக்கு ரூபா 825,250 இற்குரான நிதி நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

3.3 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் / கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ள வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பிரிவு 38 இன் பிரகாரம் அம்பாறை மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுகின்றது என பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோத்தரினால் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அந்த முறைமையின் வெற்றிகரத் தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு மேற்கொண்டு அதன்படி முறைமையினை ஆக்கபூர்வமாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ள வேண்டும் எனவும், அந்த மீளாய்வு எழுத்துமூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	2024 ஆண்டிற்கான உறுதிப்படுத்தல்கள் இத்துடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பிரிவு 38 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும்.

3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

	அவதானிப்பு			கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
	சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு	பெறுமதி ரூபா	இணங்காமைகள்		
(அ)	இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனக் கோவையின் அத்தியாயம் XXIV பிரிவு 04	1,024,622	அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்றின் படி சேவை இடைநிறுத்தப்பட்ட, சேவையை வெறிதாக்கிய, நோயுற்றிருந்த மற்றும் ஓய்வு பெற்றுள்ள உத்தியோகத்தர்களிடம் மீளாய்வாண்டு இறுதித் திகதி அளவில் 01 வருடத்திற்கும் 10 வருடங்களுக்கும் இடைப்பட்ட கால வீச்சு முதல் நிலுவைக் கடனை அறவீடு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	தற்போது அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 1,024,622 தொகையாகும். ஓய்வு பெற்றுள்ள உத்தியோகத்தர்களின் கடன் மீதிகள் அவர்களின் பணிக்கொடைத் தொகையிலிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சேவையை விட்டுச் சென்றுள்ள ஆட்களின் கடன் மீதிகளை சட்டரீதியாகவும் மற்றும் பிணையாளர்களிடமும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.	நிலுவைக் கடன்களை கால ரீதியாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்களுக்கு நடவடிக்கை எடுப்பதற்கும், தாபனக் கோவையின் படி நிலுவைக் கடனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தலும் மேற்கொள்ளப்பட வேண்டும்.
(ஆ)	பொது நிருவாக சுற்றறிக்கைகள்				
(i)	2001 ஆகஸ்ட் 22 திகதிய பொது நிருவாகச் சுற்றறிக்கை இலக்கம் 18/2001	-	ஒரு சேவை நிலையத்தில் சேவையாற்ற வேண்டிய உச்ச சேவைக் காலம் ஐந்து வருடங்கள் மற்றும் ஐந்து வருடங்களை மிகைத்து ஒரு சேவை நிலையத்தில் சேவையாற்றும் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் ஏனைய சேவை நிலையமொன்றுக்கு மாற்றப்பட வேண்டிய போதிலும், தமன பிரதேச செயலகத்தில் சேவையாற்றும் 26 உத்தியோகத்தர்கள் 05 வருடங்கள் முதல் 15 வருடங்கள் வரையான காலம் ஒரே சேவை நிலையத்தில் சேவையாற்றுவதுடன், மீளாய்வாண்டு இறுதியளவிலும் அவர்களை வேறு சேவை	இணைந்த சேவை உத்தியோகத்தர்களுக்காக 2025 வருடாந்த உள்ளக இடமாற்ற செய்முறையின் போது தகைமையுடைய பிரதியீட்டாளர்களை இணைத்துக் கொள்வதற்கு முடியாமை காரணத்தினால், 05 வருடங்களை மிகைத்துள்ள உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம் வழங்கப்படவில்லை எனவும், தனம பிரதேச செயலத்தில் சிங்கள மொழி மூலம் கடமையாற்ற நேரிடுவதுடன், அதற்கு அண்மித்த பிரதேச செயலகமாகிய இரக்காமம் பிரதேச	சுற்றறிக்கையின் படி செயற்பட வேண்டும்.

			நிலையமொன்றுக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை ஏதும் எடுத்திருக்கவில்லை.	செயலத்தில் தமிழ் மொழி மூல உத்தியோகத்தர்கள் சேவையாற்றுகின்றனர். சிங்கள மற்றும் தமிழ் மொழி மூல உத்தியோகத்தர்களை இடமாற்றும் போது கடமை அலுவல்களில் செய்முறை ரீதியான வசதியீனங்கள் ஏற்படுகின்றது. அதேபோல், தமன பிரதேச செயலகம் மற்றும் ஏனைய சிங்கள மொழிமூல பிரதேச செயலகங்கள் இடையே காணப்படுகின்ற தூரம் மிகவும் கூடியதாக காணப்படுவதனால் உத்தியோத்தர்கள் நாளாந்தம் கடமைக்கு வருவதில் வசதியீனங்களை முகங்கொடுக்க நேரிடுகின்றது. அதன் காரணமாக 05 வருடங்களுக்கு மிகையான காலம் கடந்துள்ள உத்தியோகத்தர்களை முறைப் பிரகாரம் நிர்வாக சிக்கல்கள் ஏற்படாத முறையில் 2026 ஆண்டில் இடமாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன்.	
(ii)	பொது நிருவாக, உள்நாட்டு விவகார அமைச்சின் 2009 ஏப்ரல் 16 திகதிய மற்றும் 2009/09 இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் பிரிவு 2.iv மற்றும் தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை இலக்கம் 01/2024 இன் பிரிவு (2.2)	1,466,674	03 பிரதேச செயலகங்களின் பதவிநிலை உத்தியோகத்தர் மூவர் உள்வருதல் மற்றும் வெளிச் செல்லலை விரல் அடையாள இயந்திரத்தின் மூலம் உறுதிப்படுத்தாமல் சம்பளம் வழங்கப்பட்டிருந்தது.	குறிப்பிட்ட 03 பிரதேச செயலகங்களின் பதவியணி உத்தியோகத்தர் மூவரினால் கணக்காய்வு ஐயவினாவிற்குரிய காலப் பகுதியில் உள்வரவுப் பதிவேட்டில் உள்வரவு மற்றும் வெளிச் செல்லல் உரிய முறையில் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், தற்போது விரல் அடையாள இயந்திரத்தை	சுற்றறிக்கையின் படி செயற்பட வேண்டியதுடன், அதற்கு புறம்பாக செயற்படுகின்ற உத்தியோகத்தர்களுக்கு முறையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

				பயன்படுத்தி உரிய முறையில் உள் வருதல் மற்றும் வெளிச் செல்லல் பதிவு செய்யப்படுகின்றது.	
(iii)	பொது நிருவாக, உள்நாட்டு விவகார அமைச்சின் 2009 ஏப்ரல் 16 திகதி, 2009 ஜுன் 17 மற்றும் 2023 மே 12 திகதிகளின் அரச சுற்றறிக்கை இலக்கங்கள் 09/2009, 09/2009(i) மற்றும் 02/2021(viii)	1,900,943	நேரத்தை அடிப்படையாகக் கொண்டு மேலதிக நேரம் மற்றும் விடுமுறை நாள் சம்பளம் ஆகிய நிரந்தர கடமை நேரத்தின் பின்னர் செலுத்தப்படுகின்ற கொடுப்பனவுகளுக்காக காலத்தை அடிப்படையாக கொள்ளும் போது அந்தக் காலம் விரலடையாள இயந்திரத்தின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், 2024 ஜனவரி முதல் செப்தம்பர் வரையான காலப் பகுதியில் பொத்துவில், சாய்ந்தமருது, இரக்காமம், கல்முனை மற்றும் அக்கரைபற்று பிரதேச செயலகங்களின் 19 பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு விரல் அடையாளத்தினால் உறுதிப்படுத்தாமல் விடுமுறை நாள் கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்து.	விடுமுறை நாள் சம்பளம், மேலதிக நேர கொடுப்பனவு செலுத்தும் போது விரல் அடையாள இயந்திரத்தின் தரவுகளின் அடிப்படையில் செலுத்தப்பட வேண்டும் என பிரதேச செயலாளர்களை அறிவுறுத்தப்பட்டது.	- மேற்படி -
(இ)	1947 இன் 08 ஆம் இலக்க அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் 454 அத்தியாயத்தின் பிரிவு 191	-	அரச காணியொன்று குழுவொன்றுக்கு வணிக குறிக்கோளுடன் வழங்கப்படும் போது காணி ஆணையாளர் நாயத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ள வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், 04 பிரதேச செயலகங்களில் காணி ஆணையாளர் நாயகத்தின் அங்கீகாரம் இன்றி 14 தனியார் கம்பனிகளுக்கு நீண்ட கால குத்தகை அடிப்படையில் காணிகள் வழங்கப்பட்டிருந்தது.	அட்டாளச்சேவை, பொத்துவில், நிந்தவூர் மற்றும் அக்கரைப்பற்று ஆகிய பிரதேச செயலகங்களுக்குரிய குறிப்பிட்ட காணிகள் நீண்ட கால குத்தகை அடிப்படையில் குத்தகைக்கு வழங்குவதற்காக அனைத்து ஆவணங்களும் மாகாண காணி ஆணையாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது எனவும், அதற்கான அங்கீகாரம் கிடைத்தவுடன், நீண்ட கால குத்தகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும்	காணி கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டியதுடன், அவ்வாறு செயற்படாத உத்தியோகத்தருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

		குறிப்பிட்ட பிரதேச செயலாளர்களினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

3.5 மோசடித் தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் மூலம் செயற்படுத்தப்படுகின்ற கற்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கான போசாக்கு கொடுப்பனவு வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சம்மாந்துரை மற்றும் அட்டாளச் சேனை பிரதேச செயலகப் பிரிவுகளில் 2022 ஆண்டு முதல் 2024 ஆண்டு வரை உறுதிச்சீட்டுக்கள் வினியோகிக்கும் செய்முறையின் கீழ் பதவிநிலை உத்தியோகத்தர்களின் பலவீனக் கண்காணிப்பு மற்றும் உள்ளகக் கட்டுப்பாடு செய்முறைகள் செயற்படுத்தப்படாமையினால் விடயத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தர்கள் இருவரினால் ரூபா 5,356,000 இற்கான நிதி மோசடியொன்று ஏற்படுத்தப்பட்டிருந்தது.	கற்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு போசாக்கு கொடுப்பனவு வழங்கும் நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் சம்மாந்துரை மற்றும் அட்டாளச்சேனை பிரதேச செயலகங்களில் ஏற்பட்டிருந்த வவுசர் பத்திர மோசடி தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் முன்னேற்றம் வெவ்வேறாக கீழே காட்டப்பட்டுள்ளது. • சம்மாந்துரை பிரதேச செயலகத்திற்குரிய போசாக்கு வவுசர் பத்திரங்களின் மோசடி தொடர்பாக இரக்காமம் உதவி பிரதேச செயலாளரினால் ஆரம்ப விசாரணை மேற்கொள்ளப்பட்டு குற்றப்பத்திர வரைவுடன் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன், இதன் மூலம் ஏற்பட்டுள்ள நட்டத்தை நிச்சயிப்பதற்காக நி.பி. 104(3) இன் கீழ் அறிக்கையொன்று பெற்றுக்கொள்வதற்காக காரைத்தீவு பிரதேச செயலகத்தின் கணக்காளரின் தலைமையின் கீழ் குழுவொன்று நியமனம் செய்யப்பட்டுள்ளது. தற்போது குற்றம் சாட்டப்பட்ட பெண் உத்தியோகத்தர் சம்மாந்துறை பிரதேச செயலாருக்கு ரூபா 1,350,000 தொகையொன்று செலுத்தியிருந்தார். • அட்டாளச்சேனை பிரதேச செயலத்திற்குரிய போசாக்கு வவுசர் பத்திர மோசடி தொடர்பாக ஆரம்ப விசாரணை காரைத்தீவு உதவி பிரதேச செயலாளரினால் மேற்கொள்ளப்பட்டு குற்றப்பத்திர வரைவுடன் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. இணைந்த சேவை பணிப்பாளர் நாயகத்தின் இலக்கம் DP/6/2/2025 மற்றும் 2025 ஏப்ரல் 22 திகதிய கடிதத்தின் படி, குற்றம் சாட்டப்பட்ட பெண் உத்தியோகத்தரான உமரு லெப்பை சித்தி சுகாராவின் வேலை இடைநிறுத்தப்பட்டுள்ளது. அதனால்,	விசாரணைகளை விரைவுபடுத்தி உத்தியோகத்தர் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கும், நிதி நட்டத்தை தீர்த்துக்கொள்வதற்கும், எதிர் காலத்தில் இவ்வாறான நிலைமைகளை தடுப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை வலுப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

		நேரிட்டிருந்த நட்டத்தை நிச்சயிப்பதற்காக நி.பி. 104 (3) இன் கீழ் அறிக்கையொன்று பெற்றுக்கொள்வதற்காக நிந்தவூர் பிரதேச செயலாளரின் தலைமையில் குழுவொன்று நியமனம் செய்யப்பட்டுள்ளது.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 எதிர்பார்த்த நலன்கள் (Outcome) பெற்றுக்கொள்ளாமை

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
சனாதிபதி நிதியத்திலிருந்து அட்டாளச்சேனை பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த 07 கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவுகளில் சிறுவர் விளையாட்டு மைதானம் மற்றும் கடலோர பூங்கா திருத்த வேலைச் செயற்திட்டமொன்றுக்காக ரூபா 2,925,000 தொகை செலவிடப்பட்டு விளையாட்டு உபகரணங்கள் (REVOLI) பொருத்தப்பட்டிருந்தது. 2023 திசெம்பர் 19 திகதி நிதியமைச்சுச் சுற்றறிக்கை MF/02/2023 சுற்றறிக்கையின் பிரிவு 1.11 இன் பிரகாரம் நிர்மாண வேலைகள் உத்தேச குறிக்கோளுக்காக எதிர் காலத்தில் பாதிப்பொன்று ஏற்படாதவாறு செயற்படுத்த முடியும் என மற்றும் பராமரிப்புக்காக முறையான செய்முறையொன்று தயாரிக்கப்பட்டுள்ளது என பிரதேச செயலாளரினால் திருப்தியடைய வேண்டியிருந்த போதிலும், 05 வருட உத்தரவாத காலத்தையுடைய இந்த உபகரணங்கள் கொள்வனவு செய்து 06 மாதங்கள் மிகைக்க முன்னர் உடைந்து வெடிப்படைந்து பழுதடைந்து இருந்த போதிலும், பிரதேச செயலாளரினால் அது தொடர்பாக எதுவித நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை.	இது தொடர்பாக உரிய பிரிவிற்கு பொறுப்பான பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் 2025 ஏப்ரல் 09 திகதிய கடிதத்தின் மூலம் அட்டாளச் சேனை பிரதேச செயலாளருக்கு சமர்ப்பிக்கபட்டிருந்தது. அதன்படி, பிரதேச செயலாளரின் 2025 மே 19 திகதிய கடிதத்தின் மூலம் இந்த உபகரணங்களை விரைவாக திருத்த வேலை மேற்கொண்டு தரும்படி கடிதமொன்று உரிய உற்பத்தியாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.	குறிப்பிட்ட செயற்திட்டத்தின் குறிக்கோளை நிறைவேற்றக்கூடியவாறு கருமங்களை முறைப் பிரகாரம் வேலைத் திட்டமொன்றின் மூலம் செயற்திட்டங்களின் நிறைபேறான தன்மையை உறுதிப்படுத்தும் வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு வேலைத் திட்டமொன்று செயற்படுத்தியதுடன், முறையான மேற்பார்வையொன்று மேற்கொண்டு இந்த செயற்திட்டத்தை வெற்றிகரமாக ஆக்க வேண்டும்.

4.2 செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யாமல் கைவிடப்படல்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ) விவசாய, பண்ணை விலங்குகள், காணிகள் மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் இளம் விவசாய தொழில் முயற்சிக் கிராம நிகழ்ச்சித் திட்டம் - 2024 இன் கீழ் தனம பிரதேச செயலகப் பிரிவில் வடிநாகல கிராமத்தின் விவசாயிகளுக்காக செலவிடுவதற்காக ரூபா 4,967,175	இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தமன பிரதேச செயலகப் பிரிவில் வடிநாகல கிராமத்தில் விவசாயிகளுக்கான பால் பசுக்கள் வளர்ப்பதற்காக ரூபா 4,967,175 இற்கான ஏற்பாடுகள் 2024 திசெம்பர் 03 திகதி ஒதுக்கப்பட்டிருந்ததுடன், செயற்திட்டம் 2024 திசெம்பர் 31 திகதி பூர்த்தி	பிரதேசத்திற்கு கிடைக்கக்கூடிய ஏற்பாடுகளை அபிவிருத்தி அலுவல்களுக்காக பயன்படுத்துவதற்கு செயல் நடவடிக்கை திட்டமொன்று

	இற்கான ஒதுக்கீடு வழங்கப்பட்டிருந்த போதிலும், தமன பிரதேச செயலகத்தினால் மீளாய்வாண்டின் போது இந்த செயற்திட்டத்தை செயற்படுத்தியிருக்கவில்லை.	செய்யப்பட வேண்டியிருந்தது. எனினும், பசுக்கள் கொள்வனவு செய்யும் செயற்திட்டத்தை செயற்படுத்துவது மிகவும் சிக்கலான செயன்முறையொன்றாக காணப்படுவதனால் 03 வாரங்களில் செயற்திட்டத்தை செயற்படுத்தி நிறைவேற்றிக்கொள்ள முடியாமையும், நிலவிய சீரற்ற கால நிலைமையும் காரணத்தினால் இந்த செயற்திட்டத்தை செய்முறைசார் நிறைவேற்றிக் கொள்வதில் சிக்கல் தன்மை காணப்பட்டது. அதன்படி, இது தொடர்பாக விவசாய அமைச்சினை அறிவுறுத்தி ஏற்பாடுகளை மீண்டும் பெற்றுக்கொள்ளும் படி அறிவிக்கப்பட்டது.	தயாரிக்கப்பட்டு கால ரீதியாக செயற்திட்டங்களை செயற்படுத்தாமை தொடர்பாக உரிய தரப்பினருக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	அட்டாளச்சேனை பிரதேச செயலகப் பிரிவின் பாடசாலையொன்றிற்கு காணி ஒன்று தனதாக்குவதற்கு மாகாண கல்வித் திணைக்களத்தினால் வழங்கியிருந்த ரூபா 6,500,000 தொகை குறிப்பிட்ட கருமத்திற்காக பயன்படுத்தாமல் வைப்புக் கணக்கில் 06 வருட காலம் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.	அட்டாளச்சேனை அல்-அர்ஹம் பாடசாலைக்காக காணி தனதாக்கும் செய்முறை காணியமைச்சின் அறிவுரைகள் மற்றும் கட்டளைகளின் படி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. காணிகளை தனதாக்கும் அலுவல்கள் மிகவும் சிக்கலான நீண்ட காலம் எடுக்கக்கூடிய கருமம் ஒன்றாகும். அதன்படி, காணிகளை தனதாக்கும் சட்டத்தின் பிரிவுகள் 2, 4, 5 மற்றும் 6 இன் கீழான கருமங்கள் தற்போது பூர்த்தி செய்யப்பட்டு பிரிவு 07 இன் படி வர்த்தமானியில் பிரசுரிப்பதற்காக அரச அச்சகத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது எனவும், மிகவும் விரைவாக பிரிவு 09 இன் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், 10(1) மற்றும் 17 பிரிவுகளின் கீழ் ஏனைய அலுவல்களும் எதிர் காலத்தில் மேற்கொள்ளப்படுகின்றதுடன், பிரிவு 17 இன் கீழ் அலுவல்கள் முடிவடைந்த பின்னர் அந்த வைப்புக் கணக்கில் காணப்படுகின்ற பணம் காணி உரிமையாளருக்கு செலுத்துவதற்கு முடியுமாகும் என பிரதேச செயலாளர் அறிவித்திருந்தார்.	குறிப்பிட்ட நிறுவனங்களுடன் தொடர்புகொண்டு விரைவாக காணிகளை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4.3 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சினால் 2009 ஆண்டிற்கு முன்னர் யுத்த நிலைமை காரணமாக வதிவிடங்களை இழந்துள்ள 03 அங்கத்தவர்களை விட கூடிய	அம்பாறை மாவட்ட செயலாளரின் இலக்கம் PLN/DEVE/16/RESET/HOUSE-2023 மற்றும் 2023 செப்தம்பர் 11 திகதிய கடிதத்தின் படி மகாஓய பிரதேச	கண்காணிப்பு மற்றும் பின்தொடர் நடவடிக்கையை கடுமையாக்கி குறிப்பிட்ட காலப் பகுதியினுள் வேலையை ஆரம்பித்தல்

குடும்பங்களுக்கான வீடமைப்புத் திட்டம் - 2023 இன் கீழ் மகாஓய பிரதேச செயலகத்திற்கு ரூபா 7.8 மில்லியனிற்கான ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருந்ததுடன், அவற்றில் ரூபா 3,200,000 இற்கான ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ள 04 நலன் பெறுவோரின் வீடுகளின் நிர்மாண வேலை அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.	செயலகத்திற்கு மேற்கூறிய வீடமைப்புத் திட்டத்திற்காக ரூபா 7.8 மில்லியன் ஏற்பாடுகள் கிடைத்திருந்தது. மேற்கூறிய ஏற்பாடுகளின் மீது முதலாம் கட்ட தவணைத் தொகை 2023 நவம்பர் 09 திகதி மற்றும் 2023 திசெம்பர் 28 திகதிகளில் சமூர்த்தி வங்கிகளுக்கு விடுவிக்கப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்திற்காக மொத்த தவணைத் தொகைக்கான ஏற்பாடுகள் ஒரே தடவையில் கிடைக்கவில்லை. அம்பாறை மாவட்ட செயலாளரின் இலக்கம் PLN/DEVE/RESET/05/2024 மற்றும் 2024 ஜூன் 06 திகதிய கடிதத்தின் மூலம் மீதியான தவணைக்குரிய நிதி ஏற்பாடுகள் கிடைத்திருந்ததுடன், 2024 ஜூலை 31 திகதி அளவில் அனைத்து தவணைத் தொகைகளும் சமூர்த்தி வங்கிக்கு கிடைத்திருந்தது. அதன்படி, வீடுகளை நிர்மாணித்தல் மேற்கொள்ளப்படுகின்ற அலகின் படி பிரிவிற்கு பொறுப்பான அபிவிருத்தி உத்தியோகத்தரின் மற்றும் பிரதேச செயலாளரின் பரிந்துரையின் படி நலன் பெறுவோருக்கு தவணைப் பணம் முறைப் பிரகாரம் விடுவிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.	மற்றும் உடன்படிக்கையின் பிரகாரம் வேலையை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4.4 பெறுகைகள்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
விவசாய அமைச்சின் கிராமிய பொருளாரத்தை மேம்படுத்தும் செயற்திட்டத்தின் கீழ் அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தின் மூலம் கால்நடைகள் கொள்வனவு செய்யும் போது ஆண் ஆட்டுக் குட்டிகளின் பாரம் கிலோ கிராம் ஒன்றிற்கு ரூபா 1,600 தொகை மற்றும் பெண் ஆட்டுக் குட்டியொன்றுக்கு ரூபா 1,200 தொகை போன்ற குறைந்த விலையொன்றுக்கு பெற்றிந்த போதிலும், அந்தக் காலப் பகுதியிலே அட்டாளச்சேனை, நிந்தவூர், ஆலையடிவேம்பு மற்றும் சம்மாந்துறை ஆகிய பிரதேச செயலகங்களில் ஆண் மற்றும் பெண் ஆடுகள் அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தினால் கொள்வனவு செய்திருந்த பெறுமதிக்கு ஒப்பாக கூடிய விலையொன்றுக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டதுடன், அந்த	சம்மாந்துறை மற்றும் அட்டாளச்சேனை பிரதேச செயலகங்களில் இந்தச் செயற்திட்டம் செயற்படுத்தப்பட்ட காலப் பகுதியில் சமய விழாவொன்று ஏற்பட்டிருத்தல் மற்றும் ஏனைய பிரதேச செயலகங்களில் இந்த செயற்திட்டத்தை செயற்படுத்தப்பட்டிருந்தமையால் ஆடுகளுக்காக கூடிய கேள்வியொன்று காணப்பட்டமையால் விலைகள் மிகையாக காணப்பட்டதுடன், சுற்றியுள்ள பிரதேசங்களில் கொள்வனவு செய்ய முடியாமல் போனமையால் தூர இடங்களில் இருந்து கொள்வனவு செய்வதற்கு நேரிட்டமையால் போக்குவரத்து செலவுகள் மேற்கொள்வதற்கு நேரிட்டதெனவும் பிரதேச செயலாளர்களினால் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆலையடிவேம்பு பிரதேச செயலக்தினால் இதற்காக தனியாக	அரசாங்கத்திற்கு அனுகூலமாக பெறுகை மேற்கொள்ள வேண்டியதுடன், முறையான விசாரணையொன்று நடாத்தி மிகைக் கொடுப்பனவுகளை தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பிரதேச செயலகங்களில் 1,286 கிலோ கிராம் ஆடுகளுக்காக ரூபா 308,000 தொகையொன்று மிகையாக செலுத்தப்பட்டிருந்தது.	கூறுவிலைகள் அழைத்திருக்காததுடன், திருக்கோவில் பிரதேச செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஆடுகள் கொள்வனவிற்கான பெறுகை தீர்மானத்தின் மீது கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.	

4.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	உகன பிரதேச செயலகத்திற்குரிய கலாச்சார நிலையத்திற்கான பண்டங்கள் கொள்வனவிற்காக தேசிய ஒருமைப்பாடு சமூகப் பாதுகாப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் ஏற்பாடுகளின் கீழ் வழங்கியிருந்த ரூபா 353,000 தொகைக்கான பணத்தில் கணினியொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், அதனை பயன்படுத்தாமல் களஞ்சியத்தில் விளைவற்றுக் காணப்பட்டது.	புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சுக்கு சொந்தமான வெவுகம்பத்துவ வடக்கு, உகன பிரதேச கலாச்சார நிலையத்திற்கு வழங்குவதற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த இந்தப் பண்டங்கள் மற்றும் உபகரணங்கள் அந்தக் கட்டிட வளாகத்திற்கு பௌதீக பாதுகாப்பு வழங்கப்பட்டு பொதுமக்கள் தேவைக்காக பொருத்தமான விதத்தில் முகாமைத்துவம் செய்யும் வரை பிரதேச செயலகத்தின் களஞ்சியத்தில் பாதுகாப்பாக தடுத்து வைக்கப்பட்டிருந்ததென பிரதேச செயலாளரினால் அறிவிக்கப்பட்டிருந்தது.	முறையான ஆய்வொன்றின் பின்னர் தேவைப்பாடு மற்றும் பயன்படுத்தும் இயலுமையின் படி பண்டங்கள் கொள்வனவு செய்தல் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், கொள்வனவு செய்யப்பட்ட அனைத்து உபகரணங்களும் குறிப்பிட்ட கருமங்களுக்காக பயன்படுத்தப்பட வேண்டும்.
(ஆ)	2024 பண்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தின் அக்கரைப்பற்று – 20 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்குரிய சமசமூக நிலையத்திற்கு ரூபா 346,500 தொகை பெறுமதியான ஒலிபெருக்கி முறைமை சார்ந்த 12 உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும், அவற்றில் 08 உபகரணங்கள் மாத்திரம் தனியார் கட்டிடமொன்று களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. மீதியான 04 உபகரணங்கள் தொடர்பாக கணக்காய்வுக்கு சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	2024 பண்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தின் அக்கரைப்பற்று – 20 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்குரிய புலட் சனசமூக நிலையத்திற்கு ரூபா 346,500 தொகை பெறுமதியான ஒலிபெருக்கி முறைமை சார்ந்த 12 உபரகணங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன், வெள்ள நிலைமை காரணமாக வெள்ளத்திலிருந்து பாதுகாப்பதற்காக வேறு இடமொன்றில் வைக்கப்பட்டிருந்தென பிரதேச செயலாளரினால் அறிவிக்கப்பட்டிருந்தது.	முறையான விசாரணையொன்று மேற்கொண்டு குறிப்பிட்ட பண்டங்கள் சமசமூக நிலையத்தின் பொறுப்பில் காணப்படுகின்றா என கண்டறிந்து முறையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

4.6 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
அம்பாறை மாவட்ட செயலகத்திற்கு சொந்தமான சத்தாதிஸ்ஸபுர களஞ்சியம் 2015 செப்தம்பர் 21	சத்தாதிஸ்ஸபுர களஞ்சியம் கள்வர்களினால் உடைக்கப்பட்டது தொடர்பாக	விசாரணை அலுவல்களை விரைவாக பூர்த்தி

திகதி கள்வர்களினால் திறக்கப்பட்டு பண்டங்கள் எடுத்துச் செல்லப்பட்டிருந்தமையால் ஏற்பட்டிருந்த நட்டம் ரூபா 850,738 தொகை என பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டு இறுதியளவிலும் அது தொடர்பான தொடர் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	நி.பி. 104(4) படி இறுதி விசாரணை அறிக்கை தயாரிக்கப்பட்டு 2024 ஒக்தோபர் 10 திகதி பொது நிருவாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்கு அனுப்பப்பட்ட போதிலும் அதன் குறைபாடுகளை குறிப்பிட்டு மீண்டும் சரியான நி.பி. 104(4) இறுதி விசாரணை அறிக்கை அனுபும் படி பொது நிருவாக அமைச்சுச் செயலாளரின் HA/F/07/WRI16/001 மற்றும் 2024 ஒக்தோபர் 30 திகதிய கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. அதற்கு இணங்க குறைபாடுகளை சரி செய்து தயாரிக்கப்பட்ட 104(4) இறுதி விசாரணை அறிக்கை எனது சம இலக்கம் மற்றும் 2025 மார்ச் 19 திகதி பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுச் செயலாளருக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.	செய்து நட்டம் தொடர்பாக பொறுப்பான தரப்பினருக்கு நடவடிக்கை எடுப்பதற்கும், நட்டத்தை தீர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

4.7 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2022/2023 பெரும்போக நெற் கொள்வனவு நிகழ்ச்சித் திட்டம் மற்றும் நெல் இருப்பை வழங்குதல் தொடர்பான நிகழ்ச்சித் திட்டம் தொடர்பாக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சினால் வெளியிடப்பட்டிருந்த 2023 பெப்ரவரி 09 திகதிய மற்றும் DRD/2023-I இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் பிரிவு 4.2 இன் படி நெற்கொள்வனவின் போது ஏற்படுகின்ற செயற்பாட்டுச் செலவுகள் தொடர்பாக நிதிப் பிரமாணங்கள், சுற்றறிக்கைகள் மற்றும் ஏனைய அரச அங்கீகாரங்களின் கீழ் மேற்கொள்வதற்கு மாவட்ட செயலாளரினால் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும், அம்பாறை மாவட்ட செயலகத்தினால் பொதுவான செயற்திட்டங்களுக்கான நிருவாகச் செலவு ஒதுக்குவதைப் போல ஒட்டுமொத்த ஏற்பாட்டுத் தொகையாகிய ரூபா 3,089,000,000 தொகையில் 1% என மாவட்ட செயலகம் மற்றும் 17 பிரதேச	அம்பாறை மாவட்டத்தில் 30000 மெட்ரிக் தொன் நெற் கொள்வனவு செய்யப்பட வேண்டும் என அபிவிருத்தி நிதித் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டிருந்ததுடன், நெல் கொள்வனவு செய்து 24 மணித்தியாளங்களுக்குள் குறிப்பிட் விவசாயியின் கணக்கிற்கு செலவு வைக்கப்பட வேண்டும். இது மிகவும் சிக்கலான செய்முறை ஒன்றாக காண்பட்டதுடன், ரூபா 270 மில்லியன் பெறுமதியான நெல் இருப்பொன்று கொள்வனவு செய்யப்பட்டு விவசாயிகளுக்கு கொடுப்பனவு செய்ய நேரிட்டது. நெல் ஆலை உரிமையாளர்களை தெரிவு செய்தல், அவர்களை பதிவு செய்தல், விவசாயிகளை இனங்காணல், அவர்களிடம் கொள்வனவு செய்யும் நெல் எண்ணிக்கையை தீர்மானித்தல், அறிக்கைகள் தயாரித்தல், வங்கிக்கு அனுப்புவதற்கு நேரிடல் இந்த அலுவல்களுக்காக கடமை நேரத்திற்கு மேலதிகமாக	சுற்றறிக்கையின் பிரகாரம் உண்மையாக மேற்கொள்ளப்பட்ட நிர்வாகச் செலவு மாத்திரம் முறையான அங்கீகாரத்துடன், கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், அதற்கு முரணாக மேற்கொள்ளப்பட்டிருந்த கொடுப்பனவுகளை திருப்பி அறவீடு செய்யப்பட வேண்டும்.

	செயலகங்களுக்காக ரூபா 30,890,000 தொகை நிருவாகச் செலவுகள் என ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டு சுற்றறிக்கைக்கு முரணாக உத்தியோகத்தர்களினால் உண்மையாகவே மேற்கொள்ளப்பட்ட செலவினை கவனத்தில் எடுக்காமல், அபிவிருத்தி நிதித் திணைக்களத்தின் வாய்மொழி மூல அறிவுரையின் படி என குறிப்பிட்டு அம்பாறை மாவட்ட செயலாளரின் தலைமையில் கீழ் குழுவொன்று நியமனம் செய்யப்பட்டு அந்தக் குழுவின் தீர்மானத்தின் படி குறிப்பிட்ட உத்தியோகத்தர்களுக்கு ஆரம்ப சம்பளத்தின் ¼ இற்கான பெறுமதிக்கு சமமான தொகையொன்று அவர்கள் செயற்திட்டத்துடன் தொடர்புபட்டிருந்த மாதங்களுக்கான அடிப்படையில் கூட்டுத்தொகை ரூபா 15,580,562 தொகை நிருவாகச் செலவு என 2023 ஜூலை மாதம் அளவில் கொடுப்பனவு செய்து பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. மேலும், தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது உகன பிரதேச செயலகத்தின் கீழ் ஒவ்வொரு உத்தியோகத்தரின் ஆரம்ப சம்பளத்தின் ¼ பங்கு கொடுப்பனவிற்கு மேலதிமாக விடுமுறைநாள் சம்பளம், போக்குவரத்துச் செலவு மற்றும் மேலதிக நேர கொடுப்பனவாக ரூபா 367,181 தொகை 16 உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது.	கடமையில் ஈடுபட நேரிடல், தொடர்ச்சியாக களத்திற்கு செல்ல நேரிடல், இந்த அலுவல்களுக்காக தனிப்பட்ட கையடக்க தொலைபேசிகளை பயன்படுத்த நேரிடல் ஆகிய விடயங்களின் காரணமாக முதன்மை மாவட்ட செயலாளரினால் அபிவிருத்தி நிதித் திணைக்களத்தை வினவி அந்த அறிவுரையின் படி குழுவொன்று நியமனம் செய்யப்பட்டு அங்கு எடுக்கப்பட்ட தீர்மானங்களின் படி இந்த கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டதுடன், கொடுப்பனவு செய்வதற்கு முன்னர் பிரிவுத் தலைவர்கள் மற்றும் உரிய பிரதேச செயலாளர்களின் பரிந்துரைகள் பெறப்பட்டுள்ளது. ஒதுக்கப்பட்ட் ஏற்பாடுகள் தேவைப்படுவதனால், மேலதிக நேரம், போக்குவரத்துச் செலவு, விடுமுறை நாள் சம்பளம் செலுத்தப்பட்டது என.	
(ஆ)	நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சினால் வெளியிடப்பட்டிருந்த 2023 பெப்ரவரி 09 திகதய மற்றும் DRD/2023-I இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் பிரிவு 2.3.2 இன் படி 2022 / 2023 பெரும்போக நெற் கொள்வனவு நிகழ்ச்சித் திட்டம் 2023 மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களின் போது பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், 2024 திசெம்பர் 31 திகதி அளவிலும் குறிப்பிட்ட களஞ்சியங்களில் மீதியாக காணப்பட்ட அரிசி 420,546 கிலோ கிராம்கள் மற்றும் நெல் 8,779,903 கிலோ கிராம்களுக்கான இருப்பு தொடர்பாக முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதன்படி, இந்தச் செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டிருக்காத போதிலும் அது தொடர்பான நிருவாகச் செலவு என ரூபா 15,580,562 இற்கான தொகையொன்று உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.	அபிவிருத்தி நிதித் திணைக்களத்தின் அறிவுரையின் படி 30,000 மெட்ரிக் தொன் நெல் கொள்வனவு செய்த போதிலும், ஏனைய மாவட்டங்களில் இருந்து போதியளவு கேள்வியொன்று கிடைக்கப் பெறாமையால் எதிர்பார்க்கப்பட்ட கால வரையறையினுள் நிகழ்ச்சித் திட்டத்தை பூர்த்தி செய்ய முடியாமல் போனது. அதன்படி அபிவிருத்தி நிதித் திணைக்களத்தின் அறிவுரையின் படி மீதியான நெல் இருப்பு தொடர்ந்தும் வழங்கப்பட்டு வருகின்றது.	- மேற்படி -

4.8 முகாமைத்துவ பலவீனங்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மகாஓய பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த சமகிபுர சமூர்த்தி வங்கியில் 2025 பெப்ரவரி 24 திகதியில் உள்ளவாறு காலம் கடந்த கடன் ரூபா 17,565,390 இற்கான மீதியொன்று காணப்படுவதுடன், அந்தக் கடன்தொகையை உரிய தரப்பினர்களிடம் அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	சுயதொழில், அறிவிட முடியாக் கடன் (3201) – கடன் பெற்றோருக்கு 01, 02 நினைவூட்டல் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளது. வாழ்வாதார சுழல் கடன் (3210) – பிரிவுகளின் உத்தியோகத்தர்களுக்கு கடனை அறவீடு செய்தல் தொடர்பாக அறிவிக்கப்பட்டது. வாழ்வாதார அபிவிருத்திக் கடன் (3219) – தற்போது இந்தக் கடன்மீதி ரூபா 9,548,192 தொகையாகும். ரூபா 233,024 தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. சம்பத கடன் (3220) – தற்போது இந்தக் கடன் மீதி ரூபா 7,359,073 தொகையாகும். ரூபா 68,104 தொகை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்தக் கடன் அறவீடு செய்வதற்கு தொடர்பாக மகாஓய பிரதேச செயலாளரினால் கள உத்தியோத்தர்களுக்கு பிரிவு மட்டத்தில் கூட்டங்கள் நடாத்தி, தனிப்பட்ட முறையில் வீடுகளுக்கு சென்று 2025 ஏப்ரல் 30 திகதிக்கு முன்னர் கடன் தொகையை செலுத்தும் படி அறிவுறுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டும் என கூறப்பட்டது. அதேபோல், 2025 ஏப்ரல் 30 திகதியின் பின்னர் இந்த அனைத்துக் கடன்களும் இணக்கச் சபைக்குச் சமர்ப்பிப்பதற்காக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என மகாஓய பிரதேச செயலாளரினால் விடய உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது என அறிவிக்கப்பட்டிருந்தது.	நிலுவைக் கடனை கால ரீதியாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்களுக்கு நடவடிக்கை எடுப்பதற்கும், நிலுவைக் கடன் தொகையை விரைவாக அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	அம்பாறை மாவட்ட செயலகத்தினால் 45 சமூர்த்தி சமூக அடிப்படை வங்கிகள் ஊடாக 443,779 நலன் பெறுவோருக்கு ரூபா 15,515,924,709 இற்கான கடன் தொகையொன்று வழங்கப்பட்டிருந்ததுடன், 2025 பெப்ரவரி 28 திகதி அளவில் 33,976 நலன் பெறுவோரிடம் ரூபா 2,685,152,942 தொகை அறவீடு செய்திருக்காததுடன், அவற்றில் 4,630 நலன் பெறுவோரின் ரூபா 337,025,097 தொகை அறவீடு முடியாக் கடன் என இனங் காணப்பட்டிருந்தது.	இது தொடர்பாக விரிவான அறிக்கையொன்று பெற்றுக்கொள்வதற்காக குழுவொன்று நியமனம் செய்யப்பட்டுள்ளது எனவும், அறவிட முடியாக் கடனை பகுப்பாய்வு செய்து அறவிட முடியாக் கடனை குறைத்துக்கொள்ளல் தொடர்பாக திட்டமொன்று சமர்ப்பிக்கும் படி அந்தக் குழுவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது எனவும், அறவிட முடியாக் கடன் பகுப்பாய்வு தொடர்பாக விரிவான அறிக்கையொன்று மற்றும் அறவிட முடியாக் கடனை குறைப்பதற்குரிய திட்டக் குழுவினால் வழங்கப்பட்டவுடன், விரிவான அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்படும் என மாவட்ட சமூர்த்திப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.	- மேற்படி -

(இ)	சனாதிபதி செயலகத்தின் விசேட நிதிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சம்மாந்துரை முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் எல்லை மதில் நிர்மணிக்கும் செயற்திட்டத்தின் செயற்திட்ட ஒப்பந்த வேலை குறிப்பிடப்பட்டுள்ள உடன்படிக்கை ஒப்பந்தக் காலத்தினுள் வேலைகள் பூர்த்தி செய்யப்படாவிடின், ஒப்பந்தக்காரரின் பணத்தில் ஒரு நாளைக்கு நூற்றுக்கு 0.05 வீத தாமதக் கட்டணமொன்று அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி அளவில் 52 நாட்களுக்காக ரூபா 116,073 இற்கான தாமதக் கட்டணம் அறவீடு செய்யப்பட வேண்டிக் காணப்பட்டது.	இந்தச் செயற்திட்டத்திற்கான உடன்படிக்கை கையொப்பமிடல், 2024 ஆகஸ்ட் 30 திகதி மேற்கொள்ளப்பட்ட போதிலும், தொடர்ச்சியாக காணப்பட்ட மழையின் காரணமாக பிரதான வடிகால் ஊடாக பாரிய நீர் ஓட்டமொன்று காணப்பட்டமையாலும், புலமைப் பரிசில் பரீட்சையின் பிரதான பரீட்சை நிலையமொன்றாக பயன்படுத்தப்பட்டமையாலும், உயர் தர பரிட்சை நிலைமையொன்றாக காணப்பட்டமையாலும், சனாதிபதி தேர்த்தல் மற்றும் பாராளுமன்ற தேர்தல் நிலையமொன்றாக பயன்படுத்தப்பட்டமையாலும், தொடர்ச்சியான மழை மற்றும் வெள்ள நிலைமை காரணமாக மூலப் பொருட்கள் பெற்றுக்கொள்வதில் வசதியீனங்கள் காணப்பட்டமையால், குறிப்பிட்ட காலப் பகுதியில் பூர்த்தி செய்வதற்கு முடியாமல் போனமையால், நிர்மாண வேலை அலுவல்கள் பூர்த்தி செய்ய முடியாமை போன்ற காரணங்களினால் தாமதக் கட்டணம் அறவிடப்படவில்லை என பிரதேச செயலாளரினால் அறிவிக்கப்பட்டிருந்தது.	குறிப்பிட்ட செயற்திட்டத்தை குறிப்பிட்ட கால வரையறையினுள் பூர்த்தி செய்யப்பட வேண்டியதுடன் மற்றும் தாமதங்களுக்கான தாமதக் கட்டணம் ஒப்பந்தக்காரர்களிடம் அறவீடு செய்யப்பட வேண்டும்.
(ஈ)	சனாதிபதி செயலகத்தின் விசேட நிதிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சம்மாந்துரை முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் நுழைவாயில் நிர்மணிக்கும் செயற்திட்டத்தின் செயற்திட்ட ஒப்பந்த வேலை குறிப்பிடப்பட்டுள்ள உடன்படிக்கை காலத்தினுள் வேலைகள் பூர்த்தி செய்யப்படாவிடின், ஒப்பந்தக்காரரின் பணத்தில் ஒரு நாளைக்கு நூற்றுக்கு 0.05 வீத தாமதக் கட்டணமொன்று அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி அளவில் 88 நாட்களுக்காக ரூபா 209,746 இற்கான தாமதக் கட்டணம் அறவீடு செய்யப்பட வேண்டிக் காணப்பட்டது.	இந்தச் செயற்திட்டத்தின் உடன்படிக்கை கையொப்பமிடல், 2024 ஜூலை 26 திகதி மேற்கொள்ளப்பட்ட போதிலும், தொடர்ச்சியாக நிலவிய மழையின் காரணமாக பிரதான வடிகால் ஊடாக பாரிய நீர் ஓட்டமொன்று காணப்பட்டமையாலும், புலமைப் பரிசில் பரீட்சையின் பிரதான பரீட்சை நிலையமொன்றாக பயன்படுத்தப்பட்ட மையாலும், உயர் தர பரிட்சை நிலைமையொன்றாக காணப்பட்ட மையாலும், சனாதிபதி தேர்த்தல் மற்றும் பாராளுமன்ற தேர்தல் நிலையமொன்றாக பயன்படுத்தப்பட்டமையாலும், தொடர்ச்சியான மழை மற்றும் வெள்ள நிலைமை காரணமாக மூலப் பொருட்கள் பெற்றுக்கொள்ள வசதியீனங்கள் காணப்பட்டமையால், குறிப்பிட்ட காலப் பகுதியில் பூர்த்தி செய்வதற்கு முடியாமல் இருந்த போதிலும், தற்போது குறிப்பிட்ட படலை நிர்மாண வேலை பூர்த்தி செய்யப்பட்டுள்ள காரணங்களினால் தாமதக் கட்டணம் அறவிடப்படவில்லை என சம்மாந்துறை பிரதேச செயலாளரினால் அறிவிக்கப்பட்டிருந்து.	- மேற்படி -

(உ)	2022/2023 பெரும்போக நெற் கொள்வனவு மற்றும் நெல் இருப்பை வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அரசினால் நெல் கொள்வனவு செய்யப்பட்டு குறைந்த வருமானமுடையோருக்கு அரிசி வழங்கப்பட்ட பின்னர் நெல் ஆலை உரிமையாளர்களின் பொறுப்பில் காணப்படும் அரச நெல் இருப்பினை அரிசாக்கி விற்பனை செய்தல் தொடர்பாக அபிவிருத்தி நிதித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்டிருந்த 2023 ஜூலை 17 திகதிய DFD/MD/GPPP/PD/Maha/2022/23 கடிதத்தின் படி மாவட்ட செயலகங்களில் மீதியாக காணப்படும் நெல் இருப்பு தொடர்பாக 2023 செப்தம்பர் மாதம் மேற்கொள்ளப்பட்ட முதலாவது டென்டரின் படி தெரிவு செய்யப்பட்ட கொள்வனவாளருக்கு நெல்லை விற்பனை செய்வதற்காக 09 பிரதேச செயலகங்களின் கீழ் தெரிவு செய்யப்பட்ட 22 நெல் ஆலைகளினால் மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட வேண்டியிருந்த ரூபா 154,064,224 தொகை பெறுமதியான 1,110,396 கிலோ கிராம் அரிசி 2025 மார்ச் 10 திகதி அளவிலும், மாவட்ட செயலகத்திற்கு ஒப்படைத்திருக்கவில்லை	2024.12.31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய பணத்தை செலுத்தியிருக்காத நெல் ஆலை உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டு அதற்காக அம்பாறை பொலிஸ் நிலையத்துடன் இணைந்து செயற்பட்டு வருவதுடன், அறவிடப்பட வேண்டிய நிலுவைத் தொகையை ரூபா 154 மில்லியன் தொகை வரை குறைக்கப்பட்டிருந்தது. அதேபோல், உகன பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தை சேர்ந்த நெல் ஆலை உரிமையாளர்களுக்கு வழக்குத் தாக்கல் செய்வதற்கு தேவையான அலுவல்கள் ஆரம்பிக்கும் படி விசாரணை அலுவல்கள் மேற்கொள்ளப்படுவதற்காக தேவையான ஏனைய பிரதேச செயலகப் பிரிவுகளுக்குரிய நெல் ஆலை உரிமையாளர் தொடர்பாக கணக்காய்வு ஐயவினா அறிக்கைகள் விரைவாக வழங்கும் படி கணக்காய்வுப் பிரிவினால் வேண்டப்பட்டுள்ளது.	அறவீடு செய்யப்பட வேண்டிய அரிசி எண்ணிக்கை விரைவாக அறவீடு செய்வதற்கும் மற்றும் அவ்வாறு நெல் வழங்கப்படாத நெல் ஆலை உரிமையாளர்கள் தொடர்பாக விரைவாக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு செயற்பட வேண்டும்.
(ஊ)	**நீண்ட கால குத்தகை அறவீடு செய்தல்**		
	தனம, அக்கரைப்பற்று மற்றும் கல்முனை ஆகிய பிரதேச செயலகங்களினால் வழங்கப்பட்டிருந்த நீண்ட கால குத்தகை உறுதிகள் தொடர்பாக ரூபா 24,580,510 இற்கான குத்தகைத் தொகையொன்று 2024 திசெம்பர் 31 திகதி அளவில் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது.	கல்முனை பிரதேச செயலகப் பிரிவிற்குரிய அரச காணிகளில் நீண்ட கால குத்தகை மீதி ரூபா 4,603,063 தொகையொன்று அறவிடப்பட்டுள்ளதுடன், அக்கரைப்பற்று பிரதேச செயலகத்திற்குரிய அக்கரைப்பற்று 13 கிராம சேவகர் பிரிவுகள் அமைந்துள்ள 9.5 பர்சஸ் அரச காணிகள், வாணிப குறிக்கோளுக்காக நீண்ட கால குத்தகைக்காக வழங்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தனம பிரதேச செயலகப் பிரிவில் நிலுவை குத்தகை தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	கால ரீதியாக நிலுவை குத்தகைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்களுக்கு நடவடிக்கை எடுப்பதற்கும் நிலுவைத் தொகையை விரைவாக அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

5. மனித வள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட ஆளணி எண்ணிக்கை 2,365 தொகையும், உள்ளவாறான ஆளணி எண்ணிக்கை 2,808 தொகையாக காணப்பட்டதுடன், பதவியணியில் காணப்படும் 81 வெற்றிடங்களை நிரப்புவதற்கும் மற்றும 662 மிகைப் பதவியணியினரை முறைப் பிரகாரம் அங்கீகரித்துக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	இந்த 662 மிகை உத்தியோகத்தர்களும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களாகும். அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அமைச்சு மட்டத்தில் ஆட்சேர்க்கப்படுவதுடன், அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினை கவனம் செலுத்தாமல் சேர்க்கப்பட்டுள்ளமையால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. இது தொடர்பாக முகாமைத்துவ சேவைத் திணைக்களத்திற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. போதிளவு வெற்றிடங்கள் காணப்படாமை, மொழிச் சிக்கல் காணப்படல் ஆகிய காரணங்களினால் நி.பி. 71 இன் கீழ் அங்கீகரிப்பதற்கான ஏற்பாடுகள் காணப்படவில்லை.	பதவியணி மீளாய்வொன்று மேற்கொண்டு அத்தியவசியான வெற்றிடங்களை மாத்திரம் நிரப்புவதற்கும் மிகைப் பதவியணியினரை முறைப்படுத்தி சமப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	பகிரங்க சேவை ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டிருந்த 2023 ஏப்ரல் 19 திகதிய நியமனக் கடிதத்தின் படி முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ஒருவர் அந்த சேவையின் I தரத்திலிருந்து உயர் தரத்திற்கு திறமை அடிப்படையில் பதவி உயர்த்தப்பட்டிருந்தது. அதன்படி, அந்த உத்தியோகத்தர் 2023 மே 23 ஆந் திகதி சம்மாந்துரை பிரதேச செயலகத்தில் இருந்து மாவட்ட செயலகத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்த போதிலும், 2024 ஏப்ரல் 18 திகதி அளவிலும், அவர் அந்தப் பதவியில் வேலையில் ஏற்றுக்கொண்டிருக்கவில்லை. சேவை நிலையமாகிய சம்மாந்துரை பிரதேச செயலகத்தினால் அவரை அந்த அலுவலகத்திலிருந்து விடுவித்திருந்த பின்னரும் முன்னைய பதவிக்காக 2023 ஜூன் முதல் 2023 திசெம்பர் மாதம் வரையான 07 மாதங்களுக்கான சம்பளமாக ரூபா 434,840 தொகை செலுத்தப்பட்டிருந்தது. அவரின்	பகிரங்க சேவை ஆணைக்குழுவின் இலக்கம் PSC/APP/071520 மற்றும் 2023.03.30 திகதிய கடிதத்தின் மூலம் குறிப்பிட்ட உத்தியோகத்தர் 2021.11.28 திகதி முதல் செயற்படுமாறு முகாமைத்துவ உத்தியோகத்தர் சேவையின் உயர் தரப் பதவியொன்றுக்கு நியமனம் செய்யப்பட்டிருந்தது. 2023.05.23 திகதி முதல் இந்த அலுவலகத்திற்கு இணைக்கப்பட்டிருந்த அவர் உகன பிரதேச செயலகத்தின் கடமையை ஏற்றுக்கொள்ளாத காரணத்தினால் பகிரங்க சேவை ஆணைக்குழுவின் நடவடிக்கை முறை விதிக் கோவையின் பிரிவு 98 இன் படி தொடர்ந்தும் இந்த நியமனம் செல்லுபடியாகின்றா மற்றும் எடுக்க வேண்டிய தொடர் நடவடிக்கையை வினவி பகிரங்க சேவை ஆணைக் குழுவிற்கு கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளது என.	நிலவுகின்ற வெற்றிடங்களை இனங்கண்டு பதவியணியினரை இணைப்பதற்கும் மற்றும் அந்த உத்தியோகத்தர்களின் உச்ச மட்ட செயற்திறனை பெற்றுக்கொள்ளக்கூடியவாறு கடமைகளுக்கு இணைக்கப்பட வேண்டும்.

நியமனக் கடிதத்தின் படி அந்த கடித திகதியில் இருந்து 03 வாரங்களுக்குள் நியமனத்தை ஏற்றுக்கொள்ளப்படுகின்றதா அல்லவா என தொடர்பாக அறிவிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 11 மாதங்கள் கடந்திருந்த போதிலும் இதுவரை அவ்வாறான அறிவித்தலொன்று மேற்கொண்டிருக்கவில்லை.